அதிகமாகப் போடுவதும், இப்படிப் பல கோளாறுகள் நடந்து அதற்காக சமீபத்தில் ஒரு கமிஷன் கூட விசாரித்து அறிந்து இருப்பதாகவும் அறிகிறேன். ஆகவே, இது விஷயமாக அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா? அவர்கள் மீது, ஏதாவது வழக்குகள், கைது போன்றவை நடந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். ஆகவே, எல்லாவிதத்திலும், அமைச்சர் அவர்கள் சொன்னதை வைத்துப் பார்த்தால் கூட அது முற்றிலும் இனி மேல் அவர்கள் கையிலே இருக்க முடியாத ஒரு கல்லூரி என்பதையும், அரசு அதை ஏற்று நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டியது அவசியம் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து விவரங்களும் ஆராயப்பட்டு சட்டப்படி என்ன செய்ய முடியும் என்பது பரிசீலிக்கப்படும், அதற்குப் பின்னர் தான் நான் விடை தர முடியும்.

9-20 மணி.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, புத்தனாம்பட்டி கல்வி நிறுவனம் விஷயத்தில், இது அவரவர் குடும்பத் தகராறின் காரணமாகப் பல காலமாக அங்கேயுள்ள ஊழியர்களுக்கு அபாயம் ஏற்பட்டிருக்கிறது. அவர்களது ஊதியத்தையும் எடுத்திருக்கிறார்கள் இதனால் அங்கே படிக்கக் கூடிய மாணவர்களின் கல்வி முற்றிலும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. இது அண்ணன் தம்பி தகராறு. அதனால் நிர்வாகம் கல்லூரியை மூடியிருப்பதால் மாணவர்கள் பாதிக்கப்படுவதால், உடனடியாக ஏதாவது ஒரு முறையில் நடவடிக்கை எடுக்க இந்தச் சர்க்கார் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இருக்கிற இடர்ப்பாட்டுக்கு ஏதாவது ஒரு முறையைக் கையாளுவது என்பதை எந்த ஒரு அரசாங்கமும் ஏற்றுச் செயற்பட முடியாது முறையாக முயற்சிக்கப்படும்.

நீல்கிரியில் மாணவர்கள் பஸ் கட்டணம்

*1770 திரு. எம். கே. கரீம்:

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) நீலகிரியில் பயிலும் மாணவர்கள் பஸ் கட்டணத்தில் மூன்றில் இரண்டு பங்கு கட்ட வேண்டி இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அண்டை மாநிலங்களான கேரளா, கர்நாடகாவில் இருப்பதைப் போன்று குறைந்தபட்ச கட்டணத்தை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

1990 மார்ச் 23]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :

(அ) மற்றும் (ஆ) மூன்றில் ஒரு பங்கு சலுகையும் மூன்றில் இரண்டு பங்கு கட்டணமும் கட்ட வேண்டுமென்ற நடைமுறை இப்போது உள்ளது. அதை மாற்றுகிற உத்தேசம் அரசுக்கு இல்லை.

திரு. எம். கே. கரீம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரள மாநிலத்தில் 10 கி. மீ. செல்லும் பயணிகள் ரூ. 1.10 காசு கொடுக்கிறார்கள் என்றால் மாணவர்களுக்கு 20 பைசா தான் கட்டணம் வாங்கப்படுகிறது. போக வர 40 பைசா தான். கர்நாடக மாநிலத்தில் 10 கி.மீ. தூரம் போக வர 60 பைசா வாங்குகிறார்கள். அதே நேரத்தில் நீலகிரியில் உள்ள பயணிகள் போகவர 10 கிலோ மீட்டருக்கு 2.40 பைசா கொடுக்க வேண்டியிருக்கிறது. மாணவர்கள் போகவர 1.60 பைசா செலுத்து கிறார்கள். ஒரு குடும்பத்திலிருந்து 3 மாணவர்கள் செல்கிற போது 5 ரூபாய் செலவாகிறது. மலைப் பகுதியாக இருப்ப தால் நடந்து செல்லவும் முடியாது. ஒரு சில பகுதிகளில் மூன்று மாதத்திற்கு முன்னால், கோலப்பள்ளி என்ற இடத்தில் ஒரு கரடி, ஒரு பெண்ணைத் தூக்கியெறிந்த சரித்திரத்தை நாம் படித்தோம்................

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; இப்போது நான் உங்களை வினா கேட்கத்தான் சொல்லியிருக்கிறேன். அழகான கதையொன்றை எழுதத் தொடங்கியிருக்கிறீர்கள்.

திரு. எம். கே. கரீம் : அந்தப் பயணக் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; கேட்டுக் கொண்டாலே போதும்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கேரளா, கர்நாடகா போன்ற மாநிலங்களில் மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கக்கூடிய பயணக் கட்டணச் சலுகையைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார் கள். அதுபோன்ற தன்மையில் தமிழ்நாட்டிலும் ஏற்பாடு செய்யப் படுமா என்பதுதான் அவர்களது கேள்வி என்று நினைக்கிறேன். அரசு அதுபற்றியெல்லாம் பரிசீலித்து ஒரு நல்ல முடிவை எடுக்கும்.

திரு. டி. பொன்முடி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்து கிராமப்பகுதிகளில் உள்ள பள்ளிகளுக்கு மாணவர்கள் 5 கிலோ மீட்டர் தூரம் வரை நடந்து வந்து படிக் கின்ற காரணத்தால் அவர்கள் அயர்ந்து விடுகிறார்கள், சோர்ந்து

விடுகிறார்கள். ஆகவே எல்லாத்தரப்பு மாணவர்களுக்கும் நன்மை தருகிற இந்த அரசிடம் அந்த மாணவர்களுக்கும் பஸ் கட்டணத்தைக் குறைக்க செயற்குறிப்பு ஏதேனும் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தற்போது செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. எச். எம். ராஜு ; தலைவர் அவர்களே, பழங்குடி மாணவர்கள், ஆதி திராவிட மாணவர்கள், வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கிற மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கும் திட்டம் அரசிடம் இருக்கிறதா, பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் இலவச பஸ் திட்டமே இருக்கிறதா என்று கேட்கிறார்கள் (சிரிப்பு).

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இலவச பஸ் என்று சொன்னாலே இலவசப் பயணம் என்றுதான் பொருள். உறுப்பினர் அவர்களுடைய இந்தக் கோரிக்கை பரிசீலனையில் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற தரைப் போக்குவரத்துப் பகுதியில் செல்வதை விட மலைப்பகுதிகளில் ஒரு இடத்திற்குச் செல்கிறபோது சுற்றிச் சுற்றிச் செல்லவேண்டிய காரணத்தால் அதிகமான கிலோ மீட்டர் பயணம் செல்கிற காரணத்தால் குறைந்தபட்சம் நீலகிரி மாவட்டத்திற்குள் மாணவர்கள் பஸ் கட்டணச் சலுகை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இந்த யோசனையும் கருத்தில் கொள்ளப்படும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தரங்கம்பாடி துறைமுகம் சீரமைப்பு

3777 திரு. எம். முகமது சித்திக் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) பூம்புகார் தொகுதியில் உள்ள தரங்கம்பாடி பழைய துறைமுகத்தை மீண்டும் சீரமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அங்கு போக்குவரத்து துறைமுகம் அல்லது மீன்பிடி துறைமுகம் ஏற்படுத்தப்படுமா ?